<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.43/2021 | Date | : | 25-02-2025 |
| Deposition of Witness for | : | **அ.சா.6** | Taluk | : | **சேலம்** |
| Name | : | **செந்தாமரைசெல்வி** | Calling | : | **உதவி ஆய்வாளர்** |
| Father/Husband Name | : | | Religion | : | **இந்து** |
| Village | : | **கொண்டலாம்பட்டி** | Age | : | **0** |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.02.2025.

<u>எதிரிகள் ஆஜர், 2ம் எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது, சேலம் கொண்டலாம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29-06-2020ம் தேதி, 15.00 மணிக்கு நான் சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராகப் பணியில் இருந்தபோது, சங்ககிரி TB ரோட்டை சேர்ந்த மோனோராஜா, த/பெ.சம்பத், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரின் பேரில் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.429/2020, சட்டப்பிரிவு 379 இதச-பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) முதல் தகவல் அறிக்கையை, வாதியின் புகாருடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

2) பின்னர், அன்றைய தினமே, சுமார் 15.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் நவீன் மற்றும் சஞ்சீவி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர்

தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சாட்சிகள் நவீன், சஞ்சீவி, கோபி, மணிகண்டன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பளதிவு செய்தேன்.

3) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து, இவ்வழக்கில் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் இருவரும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 52 K 5826 என்ற பதிவு எண் கொண்ட TVS Apache இருசக்கர வாகனத்தை திருடிக்கொண்டு செல்லும்வழியில், காளிகவுண்டம்பாளையம் அருகே மற்றொரு TN 52 Q 8429 என்ற பதிவு எண் கொண்ட Pulsar இருசக்கர வாகனத்தை திருடிக்கொண்டு சென்றபோது அவர்களை ஊர்பொதுமக்கள் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்ததில் எதிரிகள் இருசக்கர வாகனங்களை திருடியதை ஒப்புக்கொண்டவர்களை மகுடஞ்சாவடி காவல் நிலையம் அழைத்து சென்று விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு கொடுத்த புகாரின் பேரில் மகுடஞ்சாவடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி, அவர்கள் நிலைய குற்ற எண்.517/2020, சட்டப்பிரிவு 379 இதச-வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, எதிரிகளை விசாரணை செய்ததில் எதிரிகள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை சாட்சிகள் கோபி மற்றும் மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார்.

4) எதிரிகள் தங்களது ஒப்புதல் வாக்குமூலங்களில் "என்னை அழைத்து சென்றால் காளிகவுண்டம்பாளையத்திலும், சங்ககிரியிலும் தாங்கள் இருசக்கர வாகனங்களை திருடிய இடங்களை தங்களுக்கு அடையாளம் காட்டுகிறேன்" என்று ஒப்புதல் வாக்குமூலம்

கொடுத்துள்ளார்கள். **(எதிரிகள் கொடுத்த "என்னை அழைத்து சென்றால் காளிகவுண்டம்பாளையத்திலும், சங்ககிரியிலும் தாங்கள் இருசக்கர வாகனங்களை திருடிய இடங்களை தங்களுக்கு அடையாளம் காட்டுகிறேன்" என்ற இரண்டு ஒப்புதல் வாக்குமூலங்களின் அனுமதிக்கப்பட்ட பகுதிகள் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர், கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம்–91ன் மூலம் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது **(படிவம்–91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5) பின்னர், எதிரிகள் இருவரும் மகுடஞ்சாவடி காவல் நிலைய குற்ற எண்.517/2020, சட்டப்பிரிவு 379 இதச–வழக்கில் கைது செய்யப்பட்டு ஆத்தூர் சிறையில் இருப்பதாக தகவலறிந்து கடந்த 11–07–2020ம் தேதி அங்கு சென்று எதிரிகளை சம்பிரதாய கைது செய்து எதிரிகள் இருவரையும் அடைப்பு காவல் அறிக்கையுடன் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்தில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

6) அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகளின் மீது சட்டப்பிரிவு 379 இதச–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>2ம் எதிரியின் சார்பில் குறுக்கு விசாரணை</u> :**

1) முதல் தகவல் அறிக்கை 08 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி, காலதாமதத்திற்கு என்ன காரணம் என்றால் குறிப்பிட்ட காரணம் இல்லை. வழக்கு ஆவணங்களையும், சான்று பொருட்களையும் ஜோடித்ததால்

காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் அரை கி.மீ தூரம் இருக்கும். புகாரில் புகார்தாரரின் கையொப்பத்திற்கு கீழ் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2) சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் வழக்கு பதிவு செய்த அரை மணி நேரத்தில் சம்பவ இடத்திற்கு சென்றேன். எத்தனை மணிக்கு புகார் பெறப்பட்டது என்று புகாரின் பின்புறம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தை யார் எனக்கு அடையாளம் காட்டினார்கள் என்றால் நவீன் மற்றும் சஞ்சீவி ஆகும். புகாரில் சஜித் வீட்டிற்கு முன்பு வாகனத்தை நிறுத்திவிட்டு சென்றதாக புகார்தாரர் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சஜித்தின் வீடு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3) மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சண்முகசுந்தரம், ரமேஷ், தினேஷ், மணி, புவனேஸ்வரி மருத்துவமனையில் உள்ள வேலையாட்கள் ஆகியோர்களையும், மேற்படி சஜித்தையும் நான் இவ்வழக்கில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி நவீன் என்பவரின் வீட்டை மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும், சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில்வைத்து ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி மீது பதியப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் உள்ள சாட்சிகள் கையொப்பமானது வேறு பேனா மையினால் உள்ளது என்றால் சரிதான். அதனால், அதனை நான் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்து, சாட்சிகளை வரவழைத்து கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல.

4) புகாரில் தேதி இடைச்சொருகல் இருப்பது குறித்து புகார்தாரரிடம் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்ட புகார் என்பதால் தான் இடைச்சொருகல் உள்ளது என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் 14.30 மணிக்கு சம்பவம் நடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் தன்னுடைய புகாரிலும், என்னுடைய விசாரணையிலும் பகல் 01.45 மணியளவில் தான் வீட்டிற்கு செல்வதற்கு வெளியே வந்து பார்த்தபோது தனது வாகனத்தை காணவில்லை என்று தெரிவித்துள்ளார் என்றால் சரிதான்.

5) குற்ற இறுதி அறிக்கையில் புவனேஸ்வரி ஆஸ்பிடல் சந்தில் சஜித் என்பவரின் வீட்டின் முன்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் மாதிரி வரைபடத்தில் சஜித் என்பவரின் வீட்டின் முன்பு சந்து இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மோனோராஜ் என்பவரிடம் மறுவாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. சாட்சிகள் கோபி, மணிகண்டன் ஆகியோர்களை எந்த தேதியில், எப்போது, எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் 30-06-2020ம் தேதி விசாரித்தேன், நேரம் ஞாபகமில்லை.

6) 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் நான் பதிவு செய்யாததாலும், சான்றுபொருட்கள் எதுவும் நான் கைப்பற்றவில்லை என்பதாலும் இந்த வழக்கு குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு அதன்அடிப்படையில் சான்றுபொருட்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் மகுடஞ்சாவடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி அவர்களை நான் விசாரணை

செய்தேனா என்றால் விசாரித்தேன், ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

7) நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், உயர் அதிகாரிகள் கேட்டுகொண்டதற்காக புள்ளி விவர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை பொதுமக்கள் அடித்து காயப்படுத்தியதாக எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அது குறித்து விசாரித்து காயச்சான்று பெற்றேனா என்றால் விசாரித்தேன், காயச்சான்று இல்லை. வழக்கு சொத்தை என்னிடம் யார், எப்போது ஒப்படைத்தார்கள் என்றால் மகுடஞ்சாவடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி அவர்கள் ஒப்படைத்தார், மாதம் மற்றும் தேதி, நேரம் சரியாக ஞாபகமில்லை.

8) இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள படிவம்–91ஐ நான் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தான இருசக்கர வாகனத்தை என்னிடம் ஒப்படைக்கும்போது வாகனத்தை எவ்வாறு ஒப்படைத்தார்கள் என்றால் TATA ACE வாகனத்தில் கொண்டு வந்து ஒப்படைத்தார்கள். மேற்படி, இருசக்கர வாகனத்தின் சாவியை என்னிடம் ஒப்படைத்தார்களா என்றால் இல்லை. சாட்சிகள் மணிகண்டன், கோபி ஆகியோர்கள் என்னுடைய விசாரணையில் எதிரிகளை எத்தனை மணிக்கு கைது செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எதிரிகளை அவர்கள் விரட்டி பிடித்ததாக சொல்லியுள்ளார்கள்.

9) நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், சான்று பொருள் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக புகார்தாரரிடம்

பொய்யாக புகார் பெற்று எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**1ம் எதிரியின் சார்பில் குறுக்கு விசாரணை :**

சாட்சியானவர் நிறைமாத கர்ப்பிணியாக இருப்பதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய 1ம் எதிரி தரப்பிற்கு வலியுறுத்தியபோதும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே, 1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று மேற்படி சாட்சியம் முடிக்கப்பட்டது.

**Sd/–Senthamaraiselvi**

**Sd/–S.R.Babu**
**Judicial Magistrate No.1,**
**Sankari.**